22

# ஆவியானவரால் வழிநடத்தப்படுவது எப்படி?

விசுவாசிகளின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் பங்கைக் குறித்து இயேசுவானவரின் பல வாக்குத்தத்தங்களை யோவான் தனது நிருபத்தில் கொடுத்திருக்கிறார். அவைகளில் சில வாக்குத்தத்தங்களை நாம் வாசிப்போம்:

> நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும் படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள் [யோவான் 14:16, 17].

> என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் [யோவான் 14:26].

> நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்... இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதா

யிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்தியஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்து வார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன் [யோவான் 16:7, 12—15].

இயேசுவானவர் தமது சீஷர்களுக்கு, பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் வாசம்பண்ணுவார் என்று வாக்குத்தத்தம் செய்திருக் கிறார். அவர் அவர்களுக்கு உதவி செய்வார், அவர்களுக்குப் போதிப்பார், அவர்களை வழிநடத்துவார், வரவிருக்கும் காரியங்களை அவர்களுக்குப் போதிப்பார். இன்று கிறிஸ்துவின் சீஷர்களாக இருக்கும் நமக்கும் பரிசுத்த ஆவியானவர் இவைகளைச் செய்வார் என்று நாம் எதிர்பார்க்க முடியும்.

தான் போகிறபடியினால்தான் பரிசுத்த ஆவியானவர் வருவார் என்கிறபடியால், தான் போவது சீஷர்களுக்குச் சிலாக்கியமக இருக்கும் என்றே இயேசுவானவர் கூறினார். அதாவது, பரிசுத்த ஆவியானவ ரோடுள்ள அவர்களுடைய ஐக்கியம் இயேசுவானவர் எப்போதும் அவர் களுடன் பிரசன்னமாக இருப்பதற்குச் சமமாக இருக்கும். இல்லா விட்டால், இயேசுவானவர் அவர்களுடன் இருப்பதைவிடப் பரிசுத்த ஆவியானவர் உடனிருப்பது அதிகச் சிலாக்கியமானது என்று சொல்ல முடியாது. பரிசுத்த ஆவியானவரின் மூலமாக, பரிசுத்த ஆவியானவர் எப்போதும் நம்மோடு, நமக்குள் இருக்கிறார்.

எந்தெந்த வழிகளில் பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்துவதை நாம் எதிர்பார்க்க முடியும்?

*பரிசுத்த* ஆவியானவர் என்ற அவருடைய நாமமே, நம்மை வழிநடத்துவதில் அவருடைய முக்கிய பங்கு பரிசுத்தத்திலும், தேவனுக்குக் கீழ்ப்படிவதிலும் நம்மை வழிநடத்துவதாகும் என்பதைச சுட்டிக்காட்டுகிறது. எனவே பரிசுத்தத்துக்கு அடுத்த காரியங்களும், பூமியில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு அடுத்த காரியங்களும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு உட்பட்டிருக்கின்றன. கிறிஸ்துவின் பொதுவான கட்டளைகளுக்கும் தேவன் நம்மை அழைத்திருக்கும் தனிச்சிறப்பான ஊழியத்தைக் குறித்த கிறிஸ்துவின் கட்டளைகளுக்கும் நாம் கீழ்ப்படியும்படி அவர் நம்மை





வழிநடத்துவார். எனவே உங்கள் குறிப்பிட்ட ஊழியத்துக்காக நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட விரும்புவீர்களானால், பொதுவான பரிசுத்தத்திலும் நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட வேண்டும். ஒன்றில்லாமல் மற்றொன்றை நீங்கள் பெற முடியாது. பெரிய ஊழியச் சாதனைகளிலும் அற்புதங்களிலும் பரிசுத்த ஆவியானவர் தங்களை வழிநடத்த வேண்டுமென்று அதிகமான ஊழியர்கள் விரும்புகிறார்கள். ஆனால் பொதுவான பரிசுத்தத்தைக் குறித்து அவர்கள் அக்கறைப்படுவதில்லை. இது பெரிய பிழையாகும். இயேசுவானவர் எப்படித் தமது சீஷர்களை வழிநடத்தினார்? அடிப்படையில் அவர் அவர்களுக்குப் பரிசுத்தத்தைக் குறித்த பொதுவான போதனைகளைக் கொடுத்தார். இதோடு ஒப்பிடும்போது அவர்களுடைய ஊழியப் பொறுப்புக்களைக் குறித்த அவருடைய திட்டவட்டமான வழிநடத்துதல் குறைவாகவே இருக்கிறது. நமக்குள் வாசம்பண்ணும் பசிசுத்த ஆவியானவரைக் குறித்தும்கூட இப்படியே இருக்கும். எனவே நீங்கள் ஆவியானவரால் வழிநடத்தப்பட விரும்புவீர்களானால், முதலில பரிசுத்தமாக இருக்கும்படி அவர் வழிநடத்துவதைப் பின்பற்ற வேண்டும்.

பவுல் அப்போஸ்தலன் ''மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.'' என்று சொல்லியிருக்கிறார் [ரோமர் 8:14]. நாம் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவது நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதற்கு நிரூபணமாக இருக்கிறது. இப்படியாகத் தேவனுடைய பிள்ளைகள் எல்லோரும் ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறார்கள். நல்லொழுக்கரீதியாக சுயாதீனத்தைப் பெற்றிருக்கும் நாமே பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இவை இப்படியிருக்கிறபடியால், பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் ஏற்கெனவே வழிநடத்திவருகிறபடியால், எந்தக் கிறிஸ்தவனுக்கும் உண்மையில் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவது எப்படி என்பதைக் குறித்துப் போதிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், இதே வேளையில் சாத்தான் தேவனுடைய பிள்ளைகளைத் தவறான பாதையில் வழிநடத்த முயன்று கொண்டிருக் கிறான். நமக்குல் இருக்கும் மாம்சத்தின் பழைய சுபாவம் தேவனுடைய சித்தத்துக்கு விரோதமாக நடக்கும்படி நம்மை வழிநடத்துகிறது. எனவே விசுவாசிகள் மற்ற வழிநடத்துதல்களிலிருநது பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலைப் பகுத்தறிய வேண்டியிருக்கிறது. இதுவே முதிர்ச்சியை நோக்கிச் செல்லும் பாதையின் செயல்முறையாகும். ஆனால் அடிப்படியான உண்மை இதுவாகும்: பரிசுத்த ஆவியானவர் எப்போதுமே தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையின்படியே நம்மை வழிநடத்துவார். எப்போதுமே சரியானதும், தேவனுக்குப் பிரியமானதும்,

அவரை மகிமைப்படுத்துவதுமான காரியங்களைச் செய்யும்படியே நம்மை வழிநடத்துவார் (பார்க்க, யோவான் 16:14).

### பரிசுத்த ஆவியானவரின் சத்தம்

பரிசுத்த ஆவியானவர் சில வேளைகளில் தரிசனங்கள், தீர்க்கதரிசனம், தேவனுடைய கேட்கக்கூடிய குரல் போன்ற அற்புதமான வழிகளில் நம்மை வழிநடத்தலாம் என்று வேதவசனங்கள் நமக்குச் சொன்னாலும், வழக்கமாக அவர் நமது ஆவியில் சில காரியங்களை ''அழுத்தி உணர வைப்பதின்மூலம்'' நம்மை வழிநடத்துகிறார். அதாவது, நாம் ஒன்றைச் செய்யும்படி பரிசுத்த ஆவியானவர் விரும்புவார் என்றால், அவர் நம்மை – நமது ஆவியை ''இழுப்பார்.'' நாம் ஒரு குறிப்பிட்ட திசையில் செல்லும்படி ''வழிநடத்தப்படுவோம்.''

நமது ஆவியின் சத்தத்தை நாம் ''மனச்சாட்சி'' என்று அழைக்கலாம். தங்கள் மனச்சாட்சி எப்படிப் பேசுகிறது என்பதை எல்லாக் கிறிஸ்தவர்களும் அறிந்திருக்கிறார்கள். நாம் பாவம் செய்யும்படி சோதிக்கப்படும்போது, நமக்குள் ஒரு குரல் உரத்த சத்தத்தில் ''சோதனைக்கு இடம் கொடுக்காதே'' என்று சொல்லுவதை நாம் கேட்பதில்லை. மாறாக, நமக்குள் ஏதோ ஒன்று சோதனையை *எதிர்த்துநிற்பதை* நாம் உணர்கிறோம். நாம் சோதனைக்கு இடம் கொடுத்து, பாவம் செய்தபிறகு ஏதோ ஒரு குரல் ''பாவம் செய்து விட்டாய், நீ பாவம் செய்துவிட்டாய்'' என்று சத்தமிடுவதை நாம் கேட்ப தில்லை. ஆனால் நமக்குள் பாவத்தைக் குறித்த உணர்வைப் பெறு கிறோம். அது மனந்திரும்பி நமது பாவத்தை அறிக்கையிடும்படி நம்மை வழிநடத்துகிறது.

இதே வழியில்தான் பரிசுத்த ஆவியானவர் நமக்குப் போதித்து, பொதுவான சத்தியத்திலும் அறிவிலும் நம்மை வழிநடத்துகிறார். நமக்குள் சட்டென்று ஒரு வெளிப்பாட்டைக் கொடுப்பதின் மூலமாக (அது எப்போதும் வேதாகமத்துக்கு ஒத்ததாகவே இருக்கும்) நம்மை வழிநடத்துகிறார். இந்த வெளிப்பாடுகளைக்குறித்து மற்றவர்களுக்கு விவரிக்க நமக்குப் பத்து நிமிடங்கள் ஆகலாம், ஆனால் ஒரு சில வினாடிகளுக்குள் பரிசுத்த ஆவியானவர் இதைச் செய்துவிடுகிறார்.

ஊழியத்தின் காரியங்களிலும் பரிசுத்த ஆவியானவர் இதே வழியில் நம்மை வழிநடத்துவார். இந்த உள்ளான வழிநடத்துதலுக்கும், அழுத்தத்துக்கும் உணர்வுள்ளவர்களாக இருக்கும்படி நாம் முயற்சி செய்ய வேண்டும். படிப்படியாக ஊழியத்துக்கடுத்த காரியங்களில் ஆவியானவரின் வழிநடத்துதலைப் பின்பற்றக் (தோல்வியின் மூலம் கற்கும் வழிமுறையில்) கற்றுக்கொள்ளுவோம். ஆவியானவர் நம்மை வழிநடத்தும் இருதயத்தில் நாம் நமது மூளையின் மூலமாக (நமது





பகுத்தறிவுச் சிந்தனை) குறுக்கிடுவதின் காரணமாகவே தேவனுடைய சித்தத்தைக் குறித்த பிழையான முடிவுகளுக்கு நாம் வருகிறோம்.

### ஆவியானவர் எப்படி இயேசுவை வழிநடத்தினார்?

உள்ளான அழுத்தங்களின் மூலமாக இயேசுவானவர் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டார். எடுத்துக்காட்டாக, மாற்கு சுவிசேஷத்தில் இயேசுவானவர் யோவான்ஸ்நானனால் ஞானஸ்நானம் பெற்றவுடன் என்ன நடந்தது என்பது விவரிக்கப்பட்டுள்ளது:

> உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகும்படி *ஏவினார்* (மாற்கு 1:12 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது).

இயேசுவானவர் தம்மை வனாந்தரத்துக்கு வழிநடத்தும்படி ஒரு உரத்த சத்தத்தைக் கேட்கவில்லை, ஒரு தரிசனத்தைக் காணவில்லை. அவர் போகும்படி ஏவப்பட்டார். இப்படித்தான் பரிசுத்த ஆவியானவர் இயல்பாக நம்மை வழிநடத்துகிறார். ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்யும்படி இழுக்கப்படுவதை, வழிநடத்தப்படுவதை, உணர்த்தப் படுவதை நாம் உணர்வோம்.

கூரையின் மூலமாகக் கீழே இறக்கப்பட்ட பாரிசவாயுவினால் அவதிப்பட்ட மனிதனிடம் அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று இயேசு சொல்லியபோது, அங்கேயிருந்த வேதபாரகர் அவர் தேவ தூஷணம் சொல்லுவதாக நினைக்கிறார்கள் என்பதை உணர்ந்தார். அவர்கள் நினைப்பதை அவர் எப்படி அறிந்தார்? மாற்கு சுவிசேஷத்தில் நாம் இப்படி வாசிக்கிறோம்:

> அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார் களென்று இயேசு உடனே *தம்முடைய ஆவியில் அறிந்து*, அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன? (மாற்கு 2:8 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

அவர்கள் என்ன சிந்திக்கிறார்கள் என்பதை இயேசுவானவர் தமது ஆவியில் அறிந்தார். நமது ஆவியைக் குறித்த உணர்வை நாம் பெற்றிருப்போமானால், தேவனுடைய கிரியையை எதிர்ப்பவர்களுக்கு என்ன பதில் கொடுக்க வேண்டும் என்பதை நாமும் அறிவோம்.

### பவலின் ஊழியத்தில் ஆவியானவரின் வழிநடத்துதல்

குறைந்தபட்சம் ஊழியத்தில் இருபது ஆண்டுகளைக் கடந்து வந்தபிறது, பவுல் அப்போஸ்தலன் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதை எப்படிப் பின்பற்றவது என்பதைக் குறித்துச் சிறப்பாகக் கற்றுக்கொண்டார். எடுத்துக்காட்டாக, எபேசுவில் பவுல் தனதூ ஊழியத்தை முடிக்கும்போது, அடுத்த மூன்றாண்டுகளில் தனது

வாழ்க்கையும், ஊழியமும் எந்தத் திசையில் செல்லும் என்பது குறித்த உணர்வைப் பெற்றிருந்தார்:

> இவைகள் முடிந்தபின்பு, பவுல் மக்கெதோனியா அகாயா என்னும் நாடுகளில் சுற்றிநடந்து, எருசலேமுக்குப் போகும்படி ஆவியில் நிருணயம்பண்ணிக் கொண்டு: நான் அங்கே போனபின்பு ரோமாபுரியையும் பார்க்கவேண்டியதென்று சொல்லி [அப். 19:21].

பவுல் தான் செல்ல வேண்டிய திசையை தனது சிந்ததையில் நிர்ணயம்பண்ணவில்லை, ஆவியில் நிர்ணயம் பண்ணுகிறார் என்பதைக் கவனியுங்கள். பரிசுத்த ஆவியானவர் பவுலின் ஆவியில் அவர் முதலில் மக்கெதோனியாவுக்கும் அகாயாவுக்கும் சென்று பிறகு எருசலேமுக்கும் ரோமாபுரிக்கும் செல்ல வேண்டும் என்று வழிநடத்துவதை நாம் இங்கே காண்கிறோம். உங்களுடைய வேதாகமத்தில் பவுலின் மூன்றாவது பயணத்தையும், ரோமபுரிப் பயணத்தையும் குறித்த வரைபடம் இருக்குமானால், பவுல் எபேசுவில் ஆவியில் நிர்ணயம்பண்ணியதிலிருந்து அவர் மக்கெதேனியா, அகாயா வழியாக எருசலேமுக்கும் பிறகு சில ஆண்டுகள் கழித்து ரோமாபுரிக்கும் செல்லவதை நாம் பின்தொடர்ந்து பார்க்க முடியும்.

இன்னும் திட்டவட்டமாகச் சொல்லுவோமானால், பவுல் மக்கெதோனியாவுக்கும் அகாயாவுக்கும் சென்று, பிறகு மறுபடியும் மக்கெதோனியா வழியாக ஏஜியன் கடற்கரைப் பகுதியைச் சுற்றி, சின்ன ஆசியாவிலுள்ள ஏஜியன் கடற்கரைக்கு வந்தார். அங்கே மிலேத்து என்ற இடத்திலிருந்து எபேசு சபை மூப்பர்கள் தன்னைச் சந்திக்க வர வேண்டும் என்று செய்தி அனுப்பினார். அங்கே அவர்களிடம் இறுதியாகப் பேசியபோது, அவர் இப்படிச் சொன்னார்:

> இப்பொழுதும் நான் ஆவியிலே *கட்டுண்டவனாய்* எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங் காரியங்களை நான் அறியேன். கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன் [அப். 20:22–23 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

தான் ஆவியில் ‘‘கட்டுண்டிருப்பதாகப்’’ பவுல் கூறினார். ஆவியானவர் தன்னை எருசலேமுக்கு வழிநடத்துகிறார் என்ற உறுதிப்பாட்டை அவர் தனது ஆவியில் பெற்றிருந்தார் என்பதே இதற்கு அர்த்தமாகும். தான் எருசலேமுக்குச் செல்லும்போது என்ன நடக்கும் என்பது குறித்த முழுமையான சித்திரத்தை அவர் பெற்றிருக்கவில்லை. ஆனால் வழியில் தான் தங்கிய ஒவ்வொரு பட்டணத்திலும் அங்கே





கட்டுகளும் உபத்திரவங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன என்று ஆவியானவர் தனக்கு வெளிப்படுத்தியதை அவர் அறிந்திருந்தார். எருசலேமில் அவருக்குக் காத்திருக்கும் பாடுகளையும் உபத்திரவங்களையும் குறித்து ஆவியானவர் அவருக்கு எப்படித் தெரிவித்தார்?

## இரண்டு எடுத்துக்காட்டுகள்

அப்போஸ்தலர் 21ஆம் அதிகாரத்தில், இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் இரண்டு நிகழ்ச்சிகளைக் குறித்து நாம் வாசிக்கிறோம். மத்தியதரைக் கடல் பட்டணமாகிய தீத்துவுக்குப் பவுல் சென்றபோது முதல் நிகழ்ச்சி நடந்தது:

> அவ்விடத்திலுள்ள சீஷரைக் கண்டுபிடித்து, அங்கே ஏழுநாள் தங்கினோம். அவர்கள் பவுலை நோக்கி: நீர் எருசலேமுக்குப் போக வேண்டாம் என்று ஆவியின் ஏவுதலினாலே சொன்னார்கள் [அப். 21:4].

இந்த ஒரு வசனத்தின் காரணமாக, பவுல் தொடர்ந்து எருசலேமுக்குச் சென்றதின்மூலம் அவர் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனார் என்று சில விளக்கவுரை நூல்கள் குறிப்பிடுகின்றன. என்றாலும், நடபடிகளின் நூலின் எஞ்சிய பகுதிகளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் நம்மால் அந்த முடிவுக்குவர முடியாது. தொடர்ந்து நாம் இதை ஆராயும்போது இது நமக்குத் தெளிவாகும்.

தீருவிலிருந்த சீஷர்கள் ஆவிக்குரிய உணர்வைப் பெற்றிருந்தார்கள் என்பதும், எருசலேமில் பவுலுக்குக் காத்திருக்கும் துன்பங்களை அவர்கள் பகுத்தறிந்திருந்தார்கள் என்பதும் தெளிவாகிறது. அவர் அங்கே செல்ல வேண்டாம் என்று அவரை உறுதிப்படுத்த அவர்கள் முயன்றார்கள். இதே வசனத்தை வில்லியம் மொழிபெயர்த்திருப்பது இதை இன்னும் தெளிவுபடுத்துகிறது: ‘‘ஆவியானவரின் ஏவுதலின் காரணமாக அவர்கள் தொடர்ந்து எருசலேமுக்குச் செல்ல வேண்டாம் என்று அவர்கள் பவுலை எச்சரித்துக்கொண்டிருந்தார்கள்.’’

என்றாலும், தீருவிலிருந்த சீஷர்கள் இதில் வெற்றிபெறவில்லை. ஏனென்றால் பவுல் அவர்கள் எச்சரித்த பிறகும் தொடர்ந்து எருசலேமுக்குச் சென்றார்.

நமது ஆவியில் நாம் பெறும் வெளிப்பாடுகளோடு நமது சொந்த அர்த்தத்தைச் சேர்ப்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும் என்பதை இது போதிக்கிறது. தனக்காக எருசலேமில் பாடுகள் காத்திருக்கின்றன என்பதைப் பவுல் நன்றாக அறிந்திருந்தாலும், தான் அங்கே செல்லுவதே தேவனுடைய சித்தம் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். தேவன் தமது பரிசுத்த ஆவியானவரின் மூலமாக நமக்கு ஒன்றை வெளிப்படுத்துவார் என்றால்,நாம் போய் அதைச் சொல்ல வேண்டும் என்று

அர்த்தமல்ல. மேலும், ஆவியானவர் வெளிப்படுத்தியதோடுகூட நமது சொந்த அர்த்தத்தைச் சேர்க்காமலிருக்க நாம் கவனமாக இருக்க வேண்டும்.

### செசரியாவில் பவுல்

பவுல் எருசலேமுக்குச் செல்லும் வழியில் அடுத்த செசரியா என்ற துறைமுகத்துக்குச் சென்றார்:

> நாங்கள் அநேக நாள் அங்கே தங்கியிருக்கையில், அகபு என்னும் பேர்கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான். அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான் [அப். 21:10–11].

எருசலேமில் பவுலுக்காகப் பாடுகளும் உபத்திரவங்களும் காத்திருக்கின்றன என்பதைப் பரிசுத்த ஆவியானவர் மற்றொரு வழியில் அறிவிப்பதை நாம் காண்கிறோம். ஆனால், அகபு ‘‘அதானால் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நீ எருசலேம் பட்டணத்துக்குப் போகாதே!’’ என்று சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். தேவன் பவுலை எருசலேமுக்கு வழிநடத்திக்கொண்டிருந்தார், அதே வேளையில் அங்கே அவர் சந்திக்கவிருக்கும் பாடுகளுக்காக அவரை அகபுவின் தீர்க்கதரிசனத்தின் மூலமாக ஆயத்தம்பண்ணிக் கொண்டிருந்தார். மேலும், பவுல் பல மாதங்களுக்கு முன்பாகத் தனது ஆவியில் அறிந்திருந்ததை அகபுவின் தீர்க்கதரிசனம் உறுதிப்படுத்து வதையும் கவனியுங்கள். நாம் தீர்க்கதரிசனத்தினால் ஒருபோதும் வழிநடத்தப்படக் கூடாது. நாம் ஏற்கெனவே அறிந்திருப்பதைத் தீர்க்கதரிசனம் உறுதிப்படுத்தாவிட்டால், அதை நாம் பின்பற்றக் கூடாது.

அகபுவின் தீர்க்கதரிசனத்தை நாம் ‘‘அற்புதமான வழிநடத்துதல்’’ என்று அழைக்கலாம். ஏனென்றால் அது பவுலின் ஆவியில் உள்ளான ஏவுதலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. நமது வழி எளிதாக இருக்கப்போவதில்லை என்பதை தேவன் அறிந்திருக்கும்போது, இப்படி தரிசனத்தின்மூலமாகவோ அல்லது கேட்கக்கூடிய சத்தத்தின் மூலமாகவோ அற்புதமான வழிநடத்துதலைக் கொடுக்கிறார். இந்த அற்புதமான வழிநடத்துதல் கொடுக்கும் கூடுதலான உறுதிப்பாடு நமக்குத் தேவைப்படுகிறது. பவுலைப் பொருத்தவரையில், திரளான மக்கள் அவரைக் கிட்டத்தட்ட கொன்று போடப் போகிறார்கள். அவர்





எருசலேமுக்கு ஒரு கைதியாகச் செல்லுவதற்கு முன்பாகப் பல ஆண்டுகளைச் சிறைச்சாலையில் கழிக்க வேண்டியிருக்கிறது. என்றாலும் அவர் பெற்றிருந்த அற்புதமான வழிநடத்துதலின் காரணமாக, முடிவு சாதகமாகவே இருக்கும் என்பதை அறிந்து, இவை எல்லாவற்றிலேயும் அவரால் பரிபூரணமான சமாதானத்தைக் காத்துக் கொள்ள முடிந்தது.

நீங்கள் இப்படிப்பட்ட அற்புதமான வழிநடத்துதலைப் பெறாவிட் டாலும் கவலைப்படக் கூடாது. உங்களுக்கு அது தேவைப்படுமானால் தேவன் அதைக் கொடுப்பார். என்றாலும், நாம் உள்ளான சாட்சிக்கு எப்போதும் உணர்வுள்ளவர்களாக இருந்து அதன் வழிநடத்துதலுக்கு இடம்கொடுக்க கேண்டும்.

### தேவனுடைய சித்தத்தில் சங்கிலிகளோடு...

பவுல் எருசலேமுக்கு வந்துசேர்ந்தபோது, இயேசுவின் தரிசனத்தின் மூலம் அற்புதமான வழிநடத்துதலைப் பெற்றார்:

> அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே, திடன்கொள்; நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்க வேண்டும் என்றார் [அப். 23:11].

‘‘பவுலே, இங்கே நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்? எருசலேமுக்கு வர வேண்டாம் என்று நான் உன்னை எச்சரிக்க வில்லையா?’’ என்று இயேசுவானவர் சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். இயேசுவின் சார்பாகச் சாட்சி கூறுவதற்காக, பவுல் எருசலேமில் தேவனுடைய நோக்கத்தின் மையத்தில் இருந்தார். அவர் இறுதியில் ரோமாபுரியிலும் கிறிஸ்துவுக்குச் சாட்சி சொல்லுவார்.

பவுலில் ஆதியில் அழைக்கப்பட்டிருப்பது யூதருக்கும் புற ஜாதியாருக்கும் சாட்சி சொல்லுவது மட்டுமின்றி, ராஜாக்களுக்கும் சாட்சி சொல்லுவதற்காகவும் அவர் அழைக்கப்பட்டிருந்தார் என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும் [அப். 9:15]. எருசலேமிலும் பிறகு செசரியாவிலும் அவர் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது, அதிபதி பேலிக்சுக்கும், பெஸ்துவுக்கும், அகிரிப்பா ராஜாவாக்கும் சாட்சி கூறும்படி வாய்ப்புக் கிடைத்தது. அகிரிப்பா ராஜா கிட்டத்தட்டக் கிறிஸ்தவனாகும்படி உணர்த்தப்பட்டான் [அப். 26:28]. இறுதியாக, பவுல் ரோமப் பேரரசனாகிய நீரோவுக்கு முன்னால் சாட்சி சொல்லும்படி ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டார்.

### நீரோவைப் பார்க்கச் செல்லும் வழியில்...

இத்தாலியாவுக்குச் செல்லும் கப்பலில் இருந்தபோது, பவுல் மறபடியுமாகத் தனது ஆவியில் எவுதல் மூலமாகத் தேவனுடைய

வழிநடத்துதலைப் பெற்றார். குளிர்காலத்துக்காகக் கிரேத்தா தீவின் எந்தத் துறைமுகத்தில் தங்குவது என்று கப்பல் தலைவனும் மாலுமியும் தீர்மானிக்க முயன்றுகொண்டிருந்தபோது, பவுல் ஒரு வெளிப்பாட்டைப் பெற்றார்:

> வெகுகாலம் சென்று, உபவாச நாளும் கழிந்து போனபடியினாலே, இனிக் கப்பல் யாத்திரை செய்கிறது மோசத்திற்கு ஏதுவாயிருக்குமென்று, பவுல் அவர்களை நோக்கி: மனுஷரே, இந்த யாத்திரையினாலே சரக்குக்கும் கப்பலுக்கும் மாத்திரமல்ல, நம்முடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும் உண்டாயிருக்குமென்று *காண்கிறேன்* என்று சொல்லி, அவர்களை எச்சரித்தான் (அப். 27:9. 10).

என்ன நடக்கப் போகிறது என்பதைப் பவுல் கண்டார். பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாகவே பவுவினால் இப்படிக் காண முடிந்தது.

துரதிருஷ்டவசமாக, கப்பல் தலைவன் பவுலுக்குச் செவி கொடாமல் மற்றொரு துறைமுகத்தை எட்டிச் சேருவதற்காகவே முயன்றான். இதன் காரணமாகக் கப்பல் இரண்டு வார காலம் கடுமையான புயலினால் அலைக்கழிக்கப்பட்டது. நிலைமை மோசமாக இருந்தபடியால் கப்பலின் மாலுமிகள் இரண்டாம் நாளில் சரக்குகளைக் கடலில் எறிந்துவிட்டார்கள். மூன்றாவது நாளில் கப்பலின் தளவாடங் களையும் பெயர்த்து எறிந்தார்கள். சிறிது காலம் கழித்து பவுலுக்கு மறுபடியுமாக வழிநடத்துதல் கிடைத்தது:

> அநேக நாளாய்ச் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த பெருங்காற்று மழையும் அடித்துக்கொண்டிருந்தபடியினால், இனி தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப் போயிற்று. அநேகநாள் அவர்கள் போஜனம்பண்ணாமல் இருந்தபோது, பவுல் அவர்கள் நடுவிலே நின்று: மனுஷரே, இந்த வருத்தமும் சேதமும் வராதபடிக்கு, என் சொல்லைக்கேட்டு, கிரேத்தா தீவை விட்டுப் புறப்படாமல் இருக்க வேண்டியதாயிருந்தது. ஆகிலும், திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ்சொல்லுகிறேன். கப்பற் சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச் சேதம் வராது. ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவர் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்து நின்று: பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்க வேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான். ஆனபடியினால் மனுஷரே, திடமனதா யிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பக்கையா யிருக்கிறேன். ஆயினும் நாம் ஒரு தீவிலே விழ வேண்டியதாயிருக்கும் என்றான் (அப். 27:20–26).





பவுலின் நற்போதைய நிலமைக்கு ஏற்றபடி தேவன் ஏன் அவருக்கு ''அற்புதமான வெளிப்பாடுகளைக்'' கொடுத்தார் என்பதை நம்மால் தெலிவாகக் காண முடிகிறது. இதற்கு அடுத்தபடியாகப் பவுல் கப்பல் சேதத்தைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக ஒரு விஷப்பாம்பு அவரைக் கடிக்கப்போகிறது (பார்க்க, அப். 27:41–28:5). எல்லாம் நலமாக இருக்கப்போகிறது என்று ஒரு தேவதூதனால் உறுதி யளிக்கப்படுவது நலமாகவே இருக்கிறது.

## சில செயல்பூர்வமான ஆலோசனைகள்

பரிசுத்த ஆவியானவரின் அழுத்தங்களையும் ஏவுதல்களையும் உங்கள் ஆவியில் உணரத் துவங்குங்கள். துவக்கத்தில் பரிசுத்த ஆவியானவர் உங்களை வழிநடத்தாத வேளையில் அவர் உங்களை வழிநடத்துவதாக நினைத்துச் சில தவறுகளைச் செய்வீர்கள். இது இயல்பானதுதான். இதற்காக ஊக்கமிழந்துபோகாமல் தொடர்ந்து முயலுங்கள்.

ஒரு அமைதியான இடத்தில் வேதாகமத்தை வாசித்து, அந்நிய பாஷையில் ஜெபிப்பதற்கு நேரம் ஒதுக்குவதும் உதவியாக இருக்கும். நாம் அந்நிய பாஷையில் ஜெபிக்கும்போது, நமது ஆவியே ஜெபிக்கிறது. அப்போது நாம் நமது ஆவியில் அதிக உணர்வுள்ளவர் களாக இருக்கிறோம். தேவனுடைய வார்த்தையை வாசித்துத் தியானிப்பதின் மூலமாக, தேவனுடைய வார்த்தை ஆவிக்குரிய ஆகாரமாக இருக்கிறபடியால், நாம் அதிக உணர்வுள்ளவர்களாக ஆகிறோம்.

ஒரு குறிப்பிட்ட திசையில் தேவன் உங்களை வழிநடத்தும்போது, அவருடைய வழிநடத்துதல் மங்கிப்போகாது. தொடர்ந்து சில காலத்துக்கு நீங்கள் முக்கியமான தீர்மானங்களுக்காக ஜெபித்துக் கொண்டிருக்க வேண்டும். உங்கள் சொந்தக் கருத்துக்களோ அல்லது உணர்வுகளோ அல்ல *தேவனே* உங்களை வழிநடத்துகிறார் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட திசையைக் குறித்து ஜெபிக்கும்போது உங்கள் இருதயத்தில் சமாதானத்தைப் பெறாவிட்டால், நீங்கள் சமாதானத்தைப் பெறும் வரையில் அந்தத் திசையில் செல்லாதீர்கள்.

அற்புதமான வழிநடத்துதலை நீங்கள் பெறுவீர்களானால், அது நல்லதுதான். ஆனால் ஒரு தரிசனத்தைக் காண்பதாகவோ அல்லது கேட்கக்கூடிய குரலைக் கேட்பதாகவோ ''விசுவாசிக்க'' முயலாதிருங்கள். தேவன் தமது ராஜரீகமான சித்தப்படி சில வேலைகளில் இப்படி நம்மை வழிநடத்தினாலும், இப்படி நம்மை வழிநடத்துவதாக அவர் வாக்குத்தத்தம் அளிக்கவில்லை. ஆனால் உள்ளான சாட்சியின் மூலமாக அவர் எப்போதுமே நம்மை வழிநடத்துவார் என்று நம்மால் விசுவாசிக்க முடியும்.

இறுதியாக, தேவன் உங்களிடம் சொல்லுவதோடுகூட எதையும் கூட்டிச் சேர்க்காதிருங்கள். வருங்காலத்தில் உங்களுக்காகத் தாம் ஆயத்தம்பண்ணியிருக்கும் ஒரு ஊழியத்தைத் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தலாம். ஆனால் ஒரு சில ஆண்டுகள் கழித்தே அது நிறைவேறும்படியாக இருக்கும் வேளையில் ஒருசில வாரங்களிலேயே அது நிறைவேறும் என்று நீங்கள் யூகித்துக்கொள்ளலாம். எனது அனுபவத்திலிருந்து நான் இதை அறிவேன். எந்த யூகத்தையும் செய்யாதிருங்கள். பவுல் தனது வருங்காலத்தைக் குறித்த சில குறிப்புகளை அறிந்திருந்தாலும், முழுவதுமாக அதைக் குறித்து அறிந்திருக்கவில்லை. ஏனென்றால் தேவன் எல்லாவற்றையும் அவருக்கு வெளிப்படுத்தவில்லை. நாம் எப்போதுமே தொடர்ந்து விசுவாசத்தில் நடக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார்.



# 23

# சாக்கிரமெந்துகள்

இயேசுவானவர் சபைக்கு இரண்டு சாக்கிரமெந்துகளை மட்டுமே கொடுத்திருக்கிறார்: ஜலத்தினாலே ஞானஸ்நானம் (பார்க்க, மத். 28:19) மற்றும் கர்த்தருடைய இராப்போஜனம் (பார்க்க, 1 கொரி. 11:23–26). முதலாவது ஜலத்தினாலே ஞானஸ்நானத்தைப் பற்றிப் பார்ப்போம்.

புதிய உடன்படிக்கையின் கீழாக ஒவ்வொரு விசுவாசியும் மூன்று ஞானஸ்நானங்களை அனுபவிக்க வேண்டும். அவை கிறிஸ்துவின் சரீரத்துக்குள் ஞானஸ்நானம் பெறுதல், ஜலத்தினாலே ஞானஸ்நானம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்.

ஒருவர் மறுபடியும் பிறக்கும்போது, அவர் தானாகவே கிறிஸ்துவின் சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறார். அதாவது, அவர் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒரு உறுப்பினராக ஆகிறார்:

> எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு... (1 கொரி. 12:13; மேலும் பார்க்க, ரோமர் 6:3; எபே. 1:22–23; கொலோ. 1:18, 24).

ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறுவது இரட்சிப்பைத் தொடர்ந்து வருவதாகும். இந்த ஞானஸ்நானத்தை ஒவ்வொரு விசுவாசியும் பெற முடியும், பெற வேண்டும்.

இறுதியாக, ஒவ்வொரு விசுவாசியும் கூடுமான வரையில் விரைவாக, தான் மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிக்கும்போது, ஜலத்தினாலே ஞானஸ்நானத்தைப் பெற வேண்டும். ஞானஸ்நானமே புதிய விசுவாசியின் முதன்முதலாகக் கீழ்ப்படியும் செயலாக இருக்க வேண்டும்.